# "தமிழரசு—சு. க. இரகசிய ஒப்பந்தம்? மகாவலித் திட்டத்தை டட்லி எதிர்த்தமைக்கு இதுவே காரணமாம்"


பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
The EELA NADU

மலர் 19 கார்த்திகை 29 முஹறம் 2 இதழ் 304
யாழ்ப்பாணம் புதன்கிழமை 14-12-77



லாலா தயாரிப்பு
லாலா சோப்பின் மற்றுமோர் தயாரிப்பு
சன்சயின் சோப்
பிரகாசமான சலவைக்கு சன்சயின் சோப்".
இலங்கையில் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி


[கொழும்பு]

தமிழரசுக்கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில் சிங்களக் குடியேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே மகாவலிதிசை திருப்புத் திட்டம் திட்டப்பட்டுள்ளது என்று இச்சபையில் 1962ம் ஆண்டில் கூறிய காலஞ்சென்ற பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா, இத் திசை திருப்புத்திட்டத்தை எதிர்த்தார்.

இவ்வாறு மதவாச்சித்தொகுதி தேசியஅரசுப் பேரவை உறுப்பினரும் முன்னாள் நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சருமான திரு. மைத்திரிபால சேனநாயக்கா நேற்று பேரவையில் தெரிவித்தார்.

மகாவலியை வடக்கே திருப்பினால் திருமலை, மூதூர் ஆகிய பகுதிகள் வளம்குன்றி அப்பகுதியில் சிங்களக் குடியேற்றம் செய்யமுடியாமற் போய்விடுமென்று கூறிய திரு டட்லி சேனநாயக்கா 1962ம் ஆண்டு டாக்டர் விக்கிரமசிங்காவுடன் சேர்ந்து அத் திட்டத்தை எதிர்த்தார் என்றும் மானிப்பாய் எம் பி. திரு. வி. தர்மலிங்கம் 1970ம் ஆண்டு இந்தச் சபையில் திரு. டட்லியின் 62ம் ஆண்டுக் கூற்றை மேற்கோள் காட்டிப் பேசினர் என்றும் திரு. மைத்திரிபால கூறிய போது திரு டட்லி அப்படிக் கூறவில்லை என்று நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா மறுப்புத் தெரிவித்தார்.

ஆற்றுப் பள்ளத்தாக்குகளை

(5ம் பக்கம் பார்க்க

## கூட்டணிக்குழு-நிதி அமைச்சர் சந்திப்பு

# சீவல் தொழிலாளருக்கும் சேமலாப நிதி வசதி

## உடனடியாக செயல்படுத்த அமைச்சர் உறுதி

(கொழும்பு)

சீவல் தொழிலாளர்களுக்கும் ஊழியர் சேமலாபநிதிதிட்டவசதிகள் கிடைக்கவிருக்கின்றன. இதனை உடனடியாக செயல்படுத்துவதாக நிதியமைச்சர் திரு. ரோனி டி மெல் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உறுதியளித்துள்ளார்.

வடபகுதியில் பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தொடர்பாகவும் இத்துறையின் வளர்ச்சி குறித்தும் இன்று நிதியமைச்சர் திரு. ரோனி டி மெல்லை தமிழர் விடுதலைக்கூட்டணிக் குழுவொன்று அவரது காரியாலயத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டணி செயல்அதிபர்களில் ஒருவருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் தலைமையில் சென்ற கூட்டணி குழுவில் வடபகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி எம்பிக்கள் கலந்துகொண்டனர்

இத்துறையில் 8000 சீவல் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் இவர்களில் 1300 பேர் சிற்றூழியர்கள் என்றும் 19 சங்கங்கள் செயல்படுகின்றனவென்றும் 65 பனம்பொருள் உற்பத்திநிலையங்கள் செயல்படுகின்றனவென்றும் கூட்டணி குழுவினர் அமைச்சருக்குச் சுட்டிக் காட்டினர்.

கூட்டணி குழு நடத்திய பேச்சுக்களின் பயனாக அமைச்சர் பின்வரும் அம்சங்களைச் செயல்படுத்த இணங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

தவறணைகளுக்கு டெண்டர் முறை அகற்றப்பட்டு வரி முறை கொண்டுவரப்படும்.

(6-ம் பக்கம் பார்க்க)

## முயல் ஆமை பந்தயம் பற்றி பேரவையில் சூசைதாசன்

[கொழும்பு]

"முயலும், ஆமையும் ஓட்டப் போட்டி நடத்தியது வேறெங்குமல்ல; மன்னார் வீதியில் தான்."

இவ்வாறு மன்னார் எம். பி. திரு சூசைதாசன் நேற்றுத் தேசிய அரசுப் பேரவையில் கூறினர்.

நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"முயலும், ஆமையும் ஓட்டப் பந்தயம் நடாத்தியபோது முயல் நித்திரை கொண்டதால் ஆமை வெற்றியடைந்ததென்பது தவறு. மன்னார் வீதியொன்றில் இப்பந்தயம் நடந்துகொண்டிருந்தபோது முயலின் ஒரு கால், வீதியில் இருந்த குழியில் அகப்பட்டு முறிந்துவிட்டது. இதனால் முயலினால் தொடர்ந்து ஓட முடியவில்லை. இதனாலேயே ஆமைக்கு வெற்றி கிடைத்தது.

"அமைச்சர் ஒருமுறை மன்

(6ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டிலும் ஜி.சி.ஈ. பரீட்சை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகும் ஜி சி ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 3லட்சத்து 2 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்

இலங்கை வெளிநாட்டுத் தூதுவர்களின் பிள்ளைகளுக்காக லண்டன், புதுடில்லி, நைரோபி ஆகிய இடங்களிலுள்ள 3 நிலையங்களிலும் இலங்கையில் 1850 நிலையங்களிலும் இப்பரீட்சை நடைபெறுகிறது.


உ

இன்று

புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!

எம்மால் யாழ். நகரில் புதிதாக அமைக்கப்பட்ட

தேவி

கடைச்சல் தொழிற்சாலை

14-12-1977 புதன்கிழமை
காலை 10-45க்கும் 11-56க்கும் இடைப்பட்ட சுபநேரத்தில்

பல்கலைக் கழக யாழ். வளாகத் தலைவர்
பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களால்
திறந்து வைக்கப்படும்.

அத்தருணம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
க. ச. கோபாலபிள்ளை,
வேலணை.
நிர்வாகி

107, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தேவி ஸ்ரோர்ஸ்,
(தலைமையகம்)


## வர்த்தக அமைச்சருக்கு வடக்கில் அமோக வரவேற்பு காத்திருக்கிறது

(யாழ்ப்பாணம்)

ஐக்கியதேசியக்கட்சி அதிகப் பெரும்பான்மைப் பலத்துடன், ஆட்சிஅமைத்தபின், வடபகுதிக்கு முதல்தடவையாக இரு தினங்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வரும் வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத்முதலிக்கு வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது.

இம்மாதம் 18ந் தேதி விமானத்தில் வரும் அமைச்சருக்கு பலாலி விமான நிலையத்தில், காலை 7 மணிக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

அங்கிருந்து மோட்டார் பவனியாக அமைச்சர் காலை 7-10 மணிக்கு யாழ். அரச மாளிகையை வந்தடைவார்.

காலை 9-10 மணிக்கு அரச மாளிகையிலிருந்து நாகவிகாரைக்குச் சென்று அமைச்சர் வழிபாட்டில் கலந்துகொள்வார்.

யாழ். அரசாங்க செயலக மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கும் மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் அமைச்சர் உரை நிகழ்த்துவார்.

பிற்பகல் 2 மணிக்கு அமைச்சர் வேலணையில் விற்பனை இலாகாவைத் திறந்து வைப்பார். மாலை 3 மணிக்கு குறிகாட்டுவானில் வரவேற்பு அளிக்கப்படும்.

பிற்பகல் 3-30 மணிக்கு அமைச்சர் நயினாதீவு செல்வார். 4 மணி முதல் 5 மணி வரை நயினாதீவு பௌத்தவிகாரையிலும் நாகபூஷணி அம்மன் கோவிலிலும் நடைபெறும் வழிபாட்டில் அமைச்சர் கலந்துகொள்வார்

மாலை 5-10 மணிக்கு நயினாதீவிலிருந்து அமைச்சர் புறப்படுவார்.

மாலை 6-30 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவிலில் நடைபெறும் வழிபாட்டில் கலந்து கொள்வார்.

19ம் தேதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் புதிய அலுவலகத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராக அமைச்சர் கலந்துகொள்வார். நண்பகல் போசன விருந்தின் பின் அமைச்சர் கொழும்பு திரும்புவார்.

(திரு நி-அ)

## …ரிவிளம்பரம்

### தேவை

ரோரு மோட்டார் வாகன சேவிஸ் நிலையத்திற்கு சேவிஸ் நிலைய அனுபவமுள்ளவர்களும் சேவிஸ் நிலையத்தில் வேலைபழக விரும்புவோர்களும் 19-12- 77-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். முகாமை இயக்குனர், த ரோரு லிமிட்டெட், 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7895

3. H. P. மோட்டர் (2840° Revolution) தேவை. விலை விபரங்களுடன் தொடர்பு கொள்க. T. ஆறுமுகம், பவள வாசம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. 7914

### விற்பனைக்கு

யேசு பாலன் பாடல்கள் (சினிமா மெட்டில் கரோல்) பிரதி 1-25. புனித மரியாய் ஆசனக் கோவில், யாழ்ப்பாணம், புனித செபஸ்தியார் ஆலயம், மன்னர். 7912

## இ.போ.ச. ஊழியர் அவதி

[யாழ்ப்பாணம்]

யாழ் பஸ் நிலையத்தின் ஒரு பகுதியான மின்சாரநிலைய வீதியில் காரைநகர் டிப்போ பஸ்கள் நிறுத்தப்படும் இடத்தில் மின்சார வசதி இல்லாத காரணத்தால் இ.போ.ச ஊழியர்கள் இரவில் குப்பி விளக்கின் உதவியுடன் கடமையாற்றுகிறார்கள்.

அத்துடன் அங்கு பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பிரயாணிகள் மழைக்காலங்களில் மழையில் நனையவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது.

அந்த பஸ் நிறுத்தும் இடத்தை முன்போல் பஸ் நிலையத்தின் வசதியான இடத்திற்கு மாற்றித்தருமாறு பிரயாணிகள் கோருகின்றனர்.

இந்த பஸ் நிறுத்தும் இடங்களில் மின்சாரவசதி இல்லாதமையினால் 'கியூ'வில் நிற்கும் பிரயாணிகளுக்கு பெரும் இடைஞ்சல் ஏற்படுகின்றது என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

"கல்விக்கந்தோர் வருவோர் தொகை:

# கடமைகளை உத்தியோகஸ்தர் உடனுக்குடன் செய்தால் குறையும்"

**— வடமாகாண கல்வி அதிபதி**

[யாழ்ப்பாணம்]

'சிறுபான்மைத் தமிழர்கள் வாழ்வு முன்னேற்றத்திற்காக அவர்கள் கல்வியில் வளர்ச்சி பெற கல்வி அதிகாரிகளும் ஆசிரியர்களும பெருமளவில் உதவ முன்வரவேண்டும். அதை மறந்தவர்கள் மனிதத்தன்மையை இழந்தவர்களாவர்'

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தில் நடந்த இலாகா உத்தியோகத்தரின் முதலாவது கூட்டத்தில் பேசிய வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டத்தில் வட்டார வித்தியாதிகாரிகளும், பிரதமக் கல்வி அதிகாரிகளும் இலாகாக் கிளைப் பிரதம உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

திரு. மாணிக்கவாசகர் மேலும் கூறியதாவது: 'ஒவ்வொரு மனிதன் பிறக்கும்போது சம உரிமையுடையவர்களாகவே பிறக்கின்றார்கள். தற்செயலாக தான் ஒருவிரும்பத்தகாத இடத்தில் பிறந்திருந்தால் என்னையும், தள்ளி வைத்திருப்பார்கள் தானே. நாம் சகல மனிதர்களையும் சமமாக நடாத்தவேண்டும்.

'சிறுபான்மை, பெரும்பான்மை பாட்டாளி, பணக்காரன் என்ற வித்தியாசப் பாராமல் உதவி செய்யவேண்டும் என்பதுதான் எனது கொள்கை. இதன்படி நீங்களும நடந்து கொள்ள வேண்டும.

தினமும ஆசிரியர்களும், பெற்றோர்களும் என்னைவந்து சந்தித்துச் செல்கின்றார்கள். அவர்களை நான் புறக்கணிக்க முடியுமா? நேரத்தையும் பணத்தையும் செலவிட்டு நீண்ட நேரம காத்திருந்து, தங்கள் தேவைகளை நிறைவேற்றுகிறார்கள்.

உத்தியோகத்தர்கள் சரியாகக் கடமை செய்தால் உடனுக்குடன் கடிதங்களுக்கு பதிலளித்தால் பெற்றோர் ஆசிரியர் தேவைகளை உடனுக்குடன் கவனித்தால் அவர்கள் என்னைச் சந்திக்க வேண்டிய அவசியம் இருக்காது.

### அரசியல் வாதிகளுக்கு கஷ்டம் கொடாதீர்

:உத்தியோகத்தர்கள் அரசியல் வாதிகளுக்கு கஷ்டம் கொடுப்பவர்களாக இருக்கக் கூடாது என்பது தான் என் குறிக்கோள்.

பிரதம கல்வி அதிபர் திரு. சி. பொ. சிவபாதம், வரவேற்று பேசுகையில், 'வடபகுதிக்கு திரு. மாணிக்கவாசகர் இரண்டாவது முறையாகக் கல்வி அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் இவர் கல்வி அமைச்சில் உள்ள ஒரே ஒரு தமிழ் வித்தியாதிபதியென் பதையிட்டுப் பெருமையடைகின்றேம. இவர் முன்பு போலல்லாது, நிரந்தர வித்தியாதிபதியாக இருப்பதால், வடமாநிலம் அதிகபயனைப் பெறும வாய்ப்பு உள்ளது'' என்றார்.

'எண்ணியதை திடசங்கற்பத்துடன் செய்து முடிக்கும் வன்மையுள்ளவர். திரு.மாணிக்கவாசகர் வாழ்வில் பொதுக் கொள்கையைக் கொண்டவர். எந்த விடயத்தையும் பின் போடாது உடன்செய்து முடிக்கும ஆற்றல் மிக்கவர். அவரின் சேவையினால் வடமாநிலம, பெரும்பயனடையும்' என்றும் அவர் மேலும் கூறினர். [க-அ]

## நிதி ஒதுக்கக் கோரி தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

மீசாலை விக்னேஸ்வர வித்தியாலய பெற்றோர்-ஆசிரிய சங்கப் பொதுக் கூட்டம் அதிபர் திரு. எஸ். என். இராஜநாயகம் தலைமையில் நடைபெற்றது.

முதலாம் வகுப்பில் சேரும் பிள்ளைகளின் தொகை அதிகமாக இருப்பதால் இட நெருக்கடியைப் போக்குவதற்குத் தேசியப் பேரவை உறுப்பினரைச் சந்தித்துப் பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வகுப்பறைகளுக்கான நிதி ஒதுக்கும்படி கோருவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு உப குழு ஒன்று எம். பியைச் சந்திப்பதற்கென நியமிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் தெரிவான நடப்பு வருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு;-

தலைவர்: எஸ் என் இராஜநாயகம், உப தலைவர்கள்: ச சுப்பிரமணியம், த கனகரத்தினம், கா காசிநாதன். செயலாளர்: கு தில்லைநாதன், உப செயலாளர்: கா குலசேகரம், பொருளாளர்: சி சண்முகநாதன். (கி-அ)

---

தா. க. பொன்னுந்துரை J.P.
கொமிஷனர்.
தொலைபேசி: 710…

28/1 யாழ். வீதி
யாழ்ப்பாணம்,
7-12-77

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோடு

ஐயாத்துரை சுப்பிரமணியம், இணுவில்
வழக்காளி

இல. ஈடு/415 எதிராக

1. சங்கரப்பிள்ளை நடராசா.
2. பெண் விஜயலட்சுமி, மணற்பிட்டி, காரைநகர். தற்பொழுது கன்னதிட்டி, யாழ்ப்பாணம்,

எதிராளிகள்

யாழ். மாவட்டக்கோட்டின் ஈடு/415-ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1978-ம் ஆண்டு தை மாதம் 9-ந் திகதி (9-1-1978) திங்கட்கிழமை காலை 9-30 மணியளவில் அக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### கொடுக்கவேண்டிய தொகை

முதலும் வட்டியுமாக 17,800/- மேலும் 15,000/- ரூபாவிற்கு 4-2-1977 தொடக்கம் முழுப் பணம் இறுக்கும்வரைக்கும் நூற்றிற்கு 15 வீத வட்டியும் கூட்டிய தொகை.

### ஆதனடாப்பு

1. வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு மேற்கிறை மணற்பிட்டி நில. பர. 2-ம் 'மணற்பிட்டி' நில. பர. 2¼, (341/102-ல் பதிவு) மணற்பிட்டி நில பர. 1 குளி 2.7 (சீ 360/293ல் பதிவு) தற்பொழுது மூன்று பிரிவுகளும் ஒன்று கூடி நில. பர. 5 குளி 7.2 ஆனல் 19-3-69ல் உத்தரவு பெற்ற அளவுகாரர் ரீ. கந்தையரவால் 4114-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் 1-ம், 2-ம் துண்டுகள் என குறிக்கப்பட்ட நில. பர. 5 குளி 9½ யும் வீடும், செய்பயிர் வான்பயிரும் எல்லை கிழக்கு சரவணைமுத்து கைம்பெண் சரஸ்வதியின் உரிமைக்காரருக்கும் ஆறுமுகம் கைம்பெண் உரிமைக்காரருக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு ஆறுமுகம் கைம்பெண் தெய்வானைபினுரிமைக்காரருக்குரியவாதனம் மேற்கு சொல்லப்பட்ட படத்தின் 3ம் துண்டெனக் குறிக்கப்பட்ட செல்லையா விசுவலிங்கத்துக்குரியவாதனம், தெற்கு ஆறுமுகம் பெண் பாக்கியத்திற்கும் சரவணைமுத்து கைம்பெண் சரஸ்வதிக்குரியவாதனம் இதடங்கலும் பதிவு இல. சீ 472/37. யாழ்ப்பாணம்

2. மேற்படியிறை ''மணற்பிட்டி'' மேற்சொல்லப்சட்ட நில அளவைப்படம் 4114 ல் 3ம் துண்டெனக் குறிக்கப்பட்ட 7/10 குளி எல்லை கிழக்கு ஆறுமுகம் கைம்பெண் வள்ளியம்மையின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு மேற்சொல்லப்பட்ட படத்தின் 4-ம், 8-ம் துண்டுகளெனகுறிக்கப்பட்ட ஆதனம், மேற்கு செல்லையா விசுவலிங்கத்திற்குரியவாதனம், தெற்கு மேற்சொல்லப்பட்ட படத்தின் 1ம், 2ம் துண்டுகளெனக் குறிக்கப்பட்ட ஆதனம் இக்காணியின் மேற்சொல்லப்பட்ட 1ம் காணிக்குப் போக்குவரவு செய்யும் வண்டில் பாதை உரித்து. பதிவு இல. சீ 412/130 யாழ்ப்பாணம்.

3. மேற்படி இறை 'மணற்பிட்டி' நில. பர. 4 குளி 9.9 இது. மேற்சொல்லிய 4114ம் இலக்கப் படத்தில் 4,6, 8ம் துண்டெனக் குறிக்கப்பட்ட நில பர. 4 குளி 9.9 இதில் மேற்குப்பக்கமாக சொல்லப்பட்ட படத்தில் 4ம், 8ம் துண்டெனக் குறிக்கப்படும் 8.65 குளி எல்லைகிழக்கு பொன்னம்பலம் குணரத்தினத்திற்கும் பெண் இலட்சுமிக்குமுரியவாதனம், வடக்கு மேற்சொல்லப்பட்ட படத்தில் 5ம்,7ம் துண்டுகள், மேற்கு செல்லையா விசுவலிங்கத்திற்குரிய வாதனம், தெற்கு சொல்லப்பட்ட படத்தின் குறிப்பிட்ட 1ம், 2ம் துண்டுகள் இக்காணியில் 1ம் காணிக்கு போக்குவரவு செய்யும் வழிப்பாதை உரித்து. பதிவு இல. சீ 472/38 யாழ்ப்பாணம்.

4. மேற்படி இறை 'மணற்பிட்டி' சொல்லப்பட்ட படத்தில் 5ம் துண்டெனக் குறிப்பிட்ட 4¼ குளி எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு மேற்சொல்லப்பட்ட படத்தில் 7ம் துண்டு தெற்கு மேற்சொல்லப்பட்ட படத்தில் 4ம், 8ம் துண்டுகள் பதிவு இலக்கம் சீ 412/131 யாழ்ப்பாணம்.

**தா. க. பொன்னுத்துரை J.P.**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

அகிலகம், 28/1, யாழ்வீதி,
யாழ்ப்பாணம். 1-12-77 7911

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோடு
அட்டன் நாசனல்வங்கி (கட்டுப்படுத்தப்பட்டது)
இல: 16, குவின் வீதி, கொழும்பு,
வழக்காளி

இல: ஈடு/15092 எதிராக

130-ம் இலக்கம், 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பி. இ. தம்பையா பெண் ஞானமணி காலஞ்சென்ற பி. இ. தம்பையாவின் இந்நீதிமன்ற 2871-ம் இலக்கத் தத்துவ வழக்கில் நியமிக்கப்பட்ட தத்துவகாரி.

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு/15092 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1978-ம் ஆண்டு தைமாதம் 20-ந் திகதி (20-1-1978) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்;

### கொடுபடவேண்டிய தொகை

முதலும் வட்டியுமாக 59,264/47 மேலும் …41,555/49 திற்கு வருடம் ஒன்றுக்கு நூற்றிற்கு 10 வீத வட்டியும் 1975-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4-ந் திகதியிலிருந்து 1976-10-26-ந் திகதி வரை வட்டியும் கூட்டிய தொகைக்கு அதின்மேல் முழுப்பணம் இறுக்கும்வரை 5% வட்டியுங் கோட்டுச்செலவு 940/63 சதமும்… (நடைபெற்ற செலவு 604/59, நடைபெறவேண்டிய செலவு 196/90 சம்மாச்சமயச் செலவு 139/14) இதில் கொடுபட்ட ரூபா 25,000/-மும் செலவால் ரூபா 300/-ம் போக மிகுதி.

### ஆதனடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் பகுதியும், பிரிவும் சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை ''தாண்டவன்தறை'' நில. பர. 5 குளி 3 7/10 வீடும் பயிர்வகைகளும் எல்லை வடக்கு தம்பியப்பா நைலஸ் தற்போது எம். எம். சதத்துல்லாவினுதனம், கிழக்கு யக்கோதாவீது தற்போது யோசேப் பெர்ணண்டோவுக்கும் மறுபேருக்கும் யோசேப் பெண் சிசிலியா தற்போது சின்னையா பெண் மூத்தம்மாவுக்குமுடைய ஆதனம் மேற்கு 1-ம் குறுக்குத்தெரு, தெற்கு சின்னையா பெண் முத்தம்மாவுக்கும் அருட்பிரகாசத்திற்கும் தற்போது இராசரத்தினம் பெண் ஜெயமணிக்கு முரியவாதனம்.

**ந. பொன்னுத்துரை J.P.**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,

அகிலகம்,
28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம்,
1-12-77. 7910

## கோட்டு விற்பனை விளம்பரம்

மல்லாக நீதிமன்றம்

வழ. இல: 561

1. முருகன் செல்லன்
தொல்புரம் வாதி

எதிராக

2. சுப்பிரமணியர் சரவணமுத்து கைம்பெண். இலட்சுமியார் தானுகவும் சுப்பிரமணியம் சரவணமுத்துவின் உரிமைத் தத்துவகாரியாகவும் மூளாய், சுழிபுரம் பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் 561ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விவரிக்கப்படும் ஒருதுண்டு வயல் காணியை 1977ம் ஆண்டு மார்கழி மாதம் 30ம் திகதி (30-12-77) வெள்ளிக்கிழமை 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

### தீர்வைத் தொகை

முதல் வட்டி 3315/-. 7-3-75ம் ஆண்டு தொடக்கம் 28-11-75 வரைக்கும் ரூபா 2000/- 10% வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியாக வருடம் ஒன்றுக்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு 570-75 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு சங்கானைக் கோவிற்பற்று மூளாய் இறை ''தம்பனை'' பரப்பு நெல். இலா (8) எட்டு இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் அம்பலவாண சுவாமி கோவிலுக்குரிய ஆதனம், மேற்கு மூத்தவிநாயக சுவாமி கோவிலுக்கும் அம்பலவாணர் பெண் பானுமதியாருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு சின்னத்தம்பி கைம்பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம் இதடங்கலும். இக்காணி E 314/2-ல் யாழ்ப்பாணம் பதிவு கந்தோரில் பதிவு செய்யப்பட்டது.

**மூ. விஜயராஜன்,**
நீதிமன்ற விற்பனை. விலைமதிப்பாணையாளர்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில், 6-12-77. 7913

## கெய்ரோ மாநாடு இன்று ஆரம்பம்

# ஜோர்தான், சிரியா பங்குபற்றுமா?

# வான்ஸின் முயற்சி வெற்றி பெறும்

## இஸ்ரேலியப் பிரதமர் நம்பிக்கை

லண்டன், டிச. 13

தற்போது மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்கவெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினின் செய்தி எதையும் கொண்டுவந்தால் சிரியா வரும்போது அவரை சிரியாவர வேற்காதென அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஏற்கனவே ஜோர்டானிய மன்னர் ஹூசெயினைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவிட்ட திரு. வான்ஸ் எகிப்தியஅதிபர் அன்வர் சதாத் இன்றுகூட்டும் கெய்ரோ மாநாட்டில் சிரியாவையும் கலந்துகொள்ளச்செய்யும் முயற்சியையும் செய்யவிருக்கிறார்.

### பெகின் நம்பிக்கை

கெய்ரோ மாநாட்டில் ஜோர்தான் கலந்துகொள்ளுமா என்பது இதுவரை தெரியவில்லை.

திரு. வான்ஸின் முயற்சி நிச்சயமாக வெற்றிபெறுமென்று இஸ்ரேலியப்பிரதமர் திரு பெகின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பாக கெய்ரோமாநாட்டைத் தொடர்ந்துஜெருஸலத்தில் மேலும் பேச்சுவார்த்தை நடைபெறுமென்னும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இது இவ்வாறிருக்க, எகிப்திய அதிபர் ம. கி. பிரச்னை தொடர்பாக விரிவான சமாதான உடன்படிக்கைஒன்றினை இஸ்ரேலுடன் செய்துகொண்டு, அரபுநாடுகளின்மன மாற்றத்தைப்பெறுவார் என்று 'நியோர்க் டைம்ஸ்' சஞ்சிகை எழுதியுள்ளது.

கெய்ரோ மாநாடு இன்று ஆரம்பமாகி பத்துத் தினங்கள் வரை நடைபெறும் எனதெரிகிறது. (உ)

## கமிட்டி நியமனம்

புதுடில்லி, டிச. 13

தற்போதைய பொருளாதாரநிலை குறித்து ஆராயும் நோக்குடன் 15 பேர் கொண்ட கமிட்டி ஒன்றை காங்கிரஸ் தலைமைப்பீடம் நியமித்துள்ளது

ஜனதா ஆட்சியின் பிற்போக்குத்தனமான பொருளாதாரக் கொள்கை பற்றி இக்கமிட்டி ஆராயும் என காங்கிரஸ் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது. [உ]

## சீன-பிரான்ஸ் வர்த்தக உறவுகள் வலுப்பெறும்

பீக்கிங், டிச. 13

சீனாவும் பிரான்ஸும் இருதரப்பு வர்த்தக உறவுகளையும் வலுப்படுத்திக் கொள்ளவிருக்கின்றன.

பாரிஸிற்கு பத்துநாள் விஜயம் மேற்கொண்டிருந்த சீன வெளிநாட்டமைச்சரின் பேச்சுவார்த்தைகளையடுத்தே இவ்வர்த்தக உறவுகள் வலுப்படவிருக்கின்றன.

பிரான்ஸின் விமானங்களையும் அணுசக்தி சாதனங்களையும் சீனா இதன் அடிப்படையில் வாங்கவிருக்கின்றன. [உ]

### தாய்லாந்து

## பிராந்திய நாடுகளுடன் உறவை வளர்க்கும்

லண்டன், டிச. 13

தாய்லாந்து தனது பிராந்திய நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ளவிருப்பதாக அறிவித்துள்ளது.

இத்தகவலை தாய்லாந்து பிரதமர் திரு. கயன்ஷாக் பாங்கொக் விஜயம் மேற்கொண்டிருந்தலாவோஸ்பிரதிநிதியிடம் வெளியிட்டார்.

லாவோஸ்,தாய்லாந்துபற்றி கொண்டுள்ள தப்பபிப்பிராயங்கள் முற்றாகநீங்கவேண்டும் என்றும் அவர் லாவோஸ் பிரதிநிதியிடம் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, இரு நாடுகளும் மீண்டும்விமானப்போக்குவரத்துத் தொடர்பான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளன. (உ)

## எம். ஜி. ஆர். திரட்டும் நிதி இருகோடியைத் தாண்டியது

### தமிழக புயல் அழிவு:

சென்னை, டிச 13

தமிழக புயல், வெள்ள நிவாரணத்திற்காக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சேர்த்துவரும் நிதி இரண்டுகோடியையும் தாண்டி விட்டது.

முதல்வரின் இந்நிதிக்கு இதுவரை 2 கோடியே 6 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சேர்ந்துள்ளதாக அரசின் பத்திரிகைக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

மாநிலத்தின் பலபாகங்களிலிருந்து நிதி தொடர்ந்து வந்து குவிந்துகொண்டிருக்கிறது. [உ]

## பிரதமர் தேசாய் மேலும் ரூ. 20 லட்சம் வழங்குகிறார்

புதுடில்லி, டிச. 13

பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ள நிவாரணப் பணிகளுக்கு பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து மேலும் 20 லட்சம் ரூபா அனுமதித்துள்ளார்.

பிரதமர் இதுவரை இப்பணிக்கு 31லட்சம் ரூபா உதவி வழங்கியுள்ளார். [உ]

## தீர்மானம்

நியூயோர்க், டிச. 13

சிலி இராணுவ ஆட்சியாளரின் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிவரும் சிலிதேசபக்தர்களினது போராட்டத்துடன் ஒருமைப்பாடு தெரிவிக்கும் தீர்மானமொன்று இங்கு நடைபெற்ற ஐ. நா. பொதுச் சபையின் மூன்றாவது கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறியது.

சோவியத் யூனியன் முன்வைத்த இத்தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கை உட்பட 98 நாடுகள் வாக்களித்தன. சிலியில் ஜனநாயக உரிமைகள் காட்டுமிராண்டித்தனமான முறையில் மீறப்படுவதனை மேற்படி தீர்மானம் வன்மையாகக்கண்டித்தது. (உ)

## பாரத — சோவியத் விஞ்ஞான உறவு

புதுடில்லி, டிச. 13

பாரத-சோவியத் யூனியன் விஞ்ஞான, தொழில் நுட்பத்துறை உறவுகள்பற்றி விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

இதுதொடர்பாக புதுடில்லியில் இருநாடுகளும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

விஞ்ஞான, தொழில் நுட்பவியல் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையில் கடைப்பிடிக்கப்படவேண்டிய விஷயங்கள் குறித்து இந்த ஒப்பந்தத்தில் விளக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. [உ]

## பீக்கிங் வானொலிச் செய்தி: பாரதம் கண்டனம்

புதுடில்லி, டிச. 13

இந்திய-சீன எல்லை குறித்து கடந்த 27ம் திகதி பீகிங் வானொலி ஆத்திரமூட்டக்கூடிய வகையில் கருத்துத்தெரிவித்துள்ளது. இது குறித்துஇந்தியா சீன அரசுக்கு தனதுஆட்சேபத்தைத்தெரிவித்துள்ளது.

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாயி லோகசபையில் தெரிவித்தார்.

குறிப்பிட்ட செய்தி ஆத்திரமூட்டக்கூடியவகையில்இருந்தபோதிலும் சீனாவுடன் நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியா எதுவிதமாற்றங்களோ மறுபரிசீலனையோ செய்யமாட்டாதென்றும் திரு. வாஜ்பாயி தெரிவித்தார். (இ)

## 'துணை செய்வதாக இல்லை''

லுஸாகா, டிச. 13

''பொதுச்சந்தை நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்குமிடையிலான பொருளாதார உறவுகள் ஒருதலைப் பட்சமானவையாகவே உள்ளன. இவை வளரும் நாடுகளின் நலன்களுக்கு துணை செய்வதாகஇல்லை'' என ஆபிரிக்க, கரிபியன், பஸுபிக் பிராந்திய நாடுகளின் துஸ்தாபனத்தின் பொதுச் செயலாளர் கொனடே கூறியுள்ளார். இந்த ஸ்தாபனத்தில் 46 வளரும் நாடுகள் அங்கம் வகிக்கின்றன. [உ]

## கையாடல் வழக்கில் 3பொலிசாரும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடத்தல் பொருட்களைக் கையாடியதாக, மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மீது இருமுறை நீதிமன்றத்தில் நடந்த வழக்கிலும் இலாகா விசாரணையிலும் மூன்று பொலிஸாரும் விடுதலை செய்யப்பட்டார்கள். இரண்டரை வருடத்தின்பின் மீண்டும் அம்மூவருக்கும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட 1680 ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களைக் கையாடியதாகப் பொலிஸ் கான்ஸ்டபிள்களான இ. சண்முகராசா, குமாரவேலி, யூ. சில்வா ஆகியோர் மீது புகார் செய்யப்பட்டது.

நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கிரியல்லை ஆகியோர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மூவரும் 1975-ம் ஆண்டு தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவர் மீதும் குற்றம் சாட்டி, ஊர்காவற்றுறை நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில், பொலிஸ் அதிபரின் உத்தரவின் பேரில் இன்ஸ்பெக்டர் திரு. குமாரினால் இருதடவை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இருமுறையும் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் ஆஜராகியிருந்தார்.

பின்னர் பொலிஸ் இலாகா விசாரணையிலும் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

தற்போது கான்ஸ்டபிள் இ. சண்முகராசா, சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திற்கும், கான்ஸ்டபிள் குமாரவேலி யாழ்ப்பாணத்திற்கும், கான்ஸ்டபிள் யூ. சில்வா மாத்தறைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். (க அ)

## ''எந்த வேலையையும் செய்வதற்கு

## ஆண்களைப் போல் பெண்களாலும் முடியும்''

சென்னை, டிச. 13

''ஆண்கள் செய்யும் எந்த வேலையையும் பெண்களாலும் செய்யமுடியும்'' என்று தமிழகத்தில் அமைக்கப்பட்ட உயர் கல்விக் கமிஷன் தனது அறிக்கையில் சிபார்சு செய்துள்ளது.

பல்கலைக் கழகத்தில் பெண்களுக்கான உயர் கல்வி பற்றி ஆராயும் பொருட்டு இக்கமிஷன் திருமதி ராஜம்மாள் தேவதாஸ் தலைமையில் அமைக்கப்பட்டிருந்தது.

பெண்கள் உயர்கல்விபெற சமூகமும் பெற்றோரும் வழிவிட வேண்டும் என்று இக்கமிஷன் தெரிவித்துள்ளது.

பத்து மாதங்களுக்கு முன் இக்கமிஷன் நியமிக்கப்பட்டிருந்தது.

180 பக்கங்கள் அடங்கிய இவ்வறிக்கையை திருமதி தேவதாஸ், பல்கலைக்கழகத் தலைவர் பேராசிரியர் ஆதிசேஷையாவிடம் நேற்று சமர்ப்பித்தார்.

ஆண்களுக்குத் தகுந்த வேலைகள் எதுவும் பெண்களுக்கும் தகுந்தவையே என்று வலியுறுத்தியுள்ள இவ்வறிக்கையில் அரசும், பல்கலைக் கழகங்களும் முதலாளிகளும்இதைக் கருத்திற்கொண்டு பெண்களுக்கு 50 விகிதம் ஒதுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளது.

தொழிற்பயிற்சியிலும்பெண்களுக்கு இடம்வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. [உ]

## பிரதமர்கள் சந்திப்பு

லண்டன், டிச. 13

பிரான்ஸ் பிரதமர் பிரிட்டிஷ் பிரதமரை லண்டனில்சந்தித்து உரையாடினார்.

கிழக்கு, மேற்கு நாடுகள் உறவு, ஐரோப்பிய பாதுகாப்பு உட்பட முக்கிய பல விடயங்கள் குறித்து இவர்கள் ஆராய்ந்ததாகத் தெரிகின்றது [இ]

## ''சர்வாதிகார முயற்சியை எதிர்த்துப் போரிடுங்கள்''

### தமிழக ஆளுநர் வேண்டுகோள்

சென்னை, டிச. 13

''ஜனநாயகத்தை அழித்து, சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் முயற்சியை எதிர்த்து மக்கள் அச்சமின்றிப் போராட வேண்டும்'' என்று தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி தமிழகமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் பாரதி இளைஞர் சங்கத்தினரால் கொண்டாடப்பட்ட பாரதி விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

ஆளுநர் பாரதியார் எழுதிய 'பாஞ்சாலி சபதம்' நூலின் ஹிந்தி மொழிபெயர்ப்பு நூலை வெளியிட்டு வைத்தார்.

சாண்டில்யன் தலைமை வகித்த கருத்தரங்கில் ஔவை நடராஜன் உட்படப் பலர் உரையாற்றினர். (உ)

## 30 ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்பு நூல்

[கொழும்பு]

சுதந்திர இலங்கையின் 30 ஆண்டுகால வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைக்கொண்டு உருவாக்கிய தொகுப்பு நூல் ஒன்றை கலாச்சார அமைச்சு விரைவில் வெளியிட உள்ளது. [இ]

### ஆசிரிய சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டம்

# அநுராதபுரம் வன்செயல்கள்

## ஐ. தே. க. ஆதரவாளரே காரணம்

(யாழ்ப்பாணம்)

'முன்னாள் அமைச்சரொருவர் அனுராதபுரப் பகுதியில் நடைபெற்ற இனவாத சம்பவங்களுக்கு, உடந்தையென யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் பரவலாகப் பேசுவதை நான் உணருகின்றேன். ஆனால்தான் அனுராதபுரப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்கிறேன். அனுராதபுரப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்துக்கும் ஐ. தே. க. ஆதரவாளர்களே காரணம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஆசிரிய சங்கங்கள் ஒருங்கிணைந்து நடாத்திய கூட்டத்தில் இலங்கை ஆசிரிய சங்க உபதலைவர் திரு. வாசல குணரத்தின மேற்கண்டதலை தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு இலங்கை ஆசிரிய சங்கத்தைச் சேர்ந்த திரு. நாகராசா தலைமைவகித்தார். கூட்ட ஆரம்பத்தின் முன்னர், முன்னாள் ஆசிரிய சங்க தொழிற்சங்கவாதி ஹாண்டி பேரின்பநாயகம் மரணமானதை யொட்டி இரு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

திரு. வாஸல குணரத்தின தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. இந்த அரசு தார்மீக அரசு என்றும், பழிவாங்கும் நோக்கம் எதுவும் கிடையாது என்றும் கூறுகிறது. ஆனால் ஐ. தே. க. எதிராக இயங்கியவர்களில் 15,000 ஆசிரியர்களை கணவன் ஒரு இடத்துக்கும், மனைவி இன்னொரு இடத்துக்கும், இடமாற்றம் செய்துள்ளது. இதை எதிர்த்து நானும் பல தொழிற்சங்க உறுப்பினர்களும் ஆர்பாட்ட ஊர்வலத்தை நடாத்தினோம். இதற்காக இன்று பழிவாங்கப்பட்டு தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளேன்.

'இன்று நிதியமைச்சர் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டம் நாட்டு மக்களிடையே பெரும் கிளர்ச்சியை உருவாக்கியுள்ளது. 53-ம் ஆண்டு பங்கீட்டு அரிசியின் விலையை 25 சதத்திலிருந்து 75 சதமாக உயர்த்தியதற்கு நடைபெற்ற ஹர்த்தாலைவிட மோசமான ஹர்த்தால் நாட்டில் உருவாகவுள்ளது.

'இன்று கணக்கிடப்படும் பங்கீட்டுபுத்தகங்களை புதுப்பிக்கும் அல்லது ரத்துச்செய்யும் மதிப்பீட்டில், நாளாந்தம் 10 ரூபா சம்பளம் பெறும் ஏழைத் தொழிலாளி, 2 ஏக்கர் நிலமுள்ள விவசாயி, குடும்பத்தில் 100 ரூபா வருமானம் பெறும் மூவருள்ள குடும்பத்தவர்களுக்கு பங்கீட்டு மானியம் மறுக்கப்படவுள்ளது. எனவே இந்த அரசு முன்னர் தொழிலாளர் வர்க்கத்தை கொன்று குவித்தது. இன்று பட்டினியால் கொல்லவிருக்கிறது.

தேசிய ஆசிரிய சங்க (ஜாதிக குரு சங்க) தலைவரான திரு. ஆரியவன்ஸ பேசுகையில் கூறியதாவது: இன்று நாடு எதிர்நோக்கும் பிரச்சனைகளை சமாளிப்பதற்கு பிரதமர் ஜே. ஆர் ஜயவர்த்தன எந்தநாட்டிலும் இல்லாத ஜனாதிபதிகளிலும் பார்க்க கூடிய அதிகாரத்தைப் பெற்று சர்வாதிகாரமுறையில் அரசாள முனையவுள்ளார்' இதற்காக ஐ தே. க ஆதரவாளர்களைகொண்ட 15,000 விசேட பொலிசார் நியமிக்கப் படவுள்ளனர்.

'இன்று அரசாங்கம் 5ம் தர அதிபர்களுக்கான அடிப்படைச் சம்பளம் 310 ரூபாவாக நிர்மானம் செய்துள்ளது. இதை நாம் எதிர்த்துப் போராடிய போது, அதிபர்கள் சங்கமொன்றை அமைத்து எமது நல்ல முயற்சிகளை அழித்தொழித்துவிட்டனர். இதனால், இன்று ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒருகுரலில் ஒருமித்து போராடினால் தாம் நிச்சயமாக வெற்றிபெறுவோம். அதற்காக அரசிற்குமண்டியிட்டோ துதிபாடியோ பெறமாட்டோம் என்றார்.

இலங்கை தமிழர் ஆசிரிய சங்கச்செயலாளர்திரு.த.பாலசுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது: இன்று எம்மிடையேஏற்பட்டுள்ள ஒற்றுமை எமதுஉரிமைகளை வென்றெடுப்பதற்கும் அமையவேண்டும் நாம் பல பிரச்னைகளை எதிர்நோக்கினும் தேசியஇனம், சுயநிர்ணய உரிமையை இழந்து மற்றைய போராட்டங்களில் ஈடுபடுவது மடைமைத்தனம். எனவேஇவ்வொற்றுமை,இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பத்துடன், நமது உரிமைகளை வென்றெடுக்க சகல தொழிற்சங்கங்களும்போராட வேண்டும்.

இக்கூட்டத்தில், திருவாளர்கள் எஸ். மகாலிங்கசிவம், சு. இராசநாயகமும் உரையாற்றினர். [ஜெ]

### அரசியல் அமைப்பு திருத்தம்:

# பொதுமக்களின் கருத்தை அறிய கேள்விக் கொத்து

(கொழும்பு)

அரசியல் அமைப்பைத் திருத்தி அமைப்பது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள ஆட்சி மன்றத் தெரிவுக்குழுவின் முன் நேரில் கருத்துக்களைத் தெரிவிக்க பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் அளிப்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதுபற்றி விரைவில் முடிவு செய்யப்படும் என்று ஆட்சி மன்றக்குழுச் செயல் அதிகாரி திரு. எஸ். எஸ். விஜயசிங்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் அரசியல் அமைப்புத் திருத்தம் குறித்து எழுத்துமூலம் கருத்து தெரிவிக்க விரும்பும் பொதுமக்களுக்காக இத்தெரிவுக்குழு கேள்விக்கொத்து ஒன்றினை வெளியிட்டுள்ளது.

சிறுபான்மையினரால் எதிர் நோக்கப்படும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசியல் அமைப்பில் சேர்த்துக்கொள்ள நீர் விரும்பும் ஏற்பாடுகளும் பாதுகாப்பும் யாவை?

குடியரசின் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறை, பதவியிலிருந்து அகற்றல், அவர் பதவியை வகிப்பதற்கான நியதிகள், அவரின் அதிகாரங்கள், கடமைகள், சிறப்புரிமைகள் பற்றிய உமது குறிப்புகள் என்ன?

ஜனாதிபதியுடன் ஓர் உபஜனாதிபதியும் இருக்க வேண்டுமாயின் அவர் எவ்வாறு தெரிவு செய்யப்பட வேண்டும்?

அரசியல் அமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட வேண்டும் என நீர்விரும்பும் அடிப்படை உரிமைகள் எவை?

இவ்வாறான 21 வினாக்கள் அடங்கிய இவ்வினாக் கொத்துக்கான கருத்துக்களை இம் மாதம் 26-ம் திகதிக்கு முன்னர் தெரிவுக்குழுவுக்கு அனுப்பும்படி பொதுமக்கள் கேட்கப் பட்டுள்ளனர். (ம-இ)

# சட்டத்தரணி எதிர்ப்பில் பெண் ஜூரர் தெரிவு ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நேற்று நடந்த புங்குடுதீவுக் கொலை வழக்கில் லொத்தர் மூலம் ஜூரி சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட இரு தமிழ்ப் பெண்கள் எதிரி தரப்பு சட்டத்தரணியால், நிராகரிக்கப்பட்டதால் அவர்கள் ஜூரிசபையில்இடம்பெறவில்லை.

யாழ்ப்பாணம்மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் புங்குடுதீவுக் கொலைவழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

லொத்தர் மூலம் ஜூரிசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்ட போது அங்கு சமூகமளித்திருந்த இரு பெண் ஜூரிகள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால், எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். தம்பித்துரை அதற்கு மறுப்புத் தெரிவித்ததால் அவர்கள் ஜூரி சபையில் இடம்பெறவில்லை.

இதனை அவதானித்த அரசு சட்டத்தரணி பி. சிவலோகநாதன் 'பெண்களுக்குச் சம உரிமை வேண்டும் என்று மேடைகளில் பேசும் சட்டத்தரணிகள்எதற்கானப் பெண் ஜூரிகளை ஆட்சேபிக்க வேண்டும்' என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த எதிரி தரப்புச் சட்டத்தரணி, பெண்கள் இளகிய மனதுள்ளவர்களென்றும் எதிரிகளை இலகுவில் குற்றவாளிகளெனக் கூறிவிடுவார்கள் என்ற அபிப்பிராயம் நிலவுவதால் ஆட்சேபித்தோம் என்றும் கூறினர். (க-அ)

# பரராசா கொலை நஷ்ட ஈடு வழக்கு

## நடேசன் கியூ. ஸி. வாதம்

(யாழ்ப்பாணம்)

''சம்பந்தப்பட்ட காலங்களில், 2ம் எதிராளி அரசின் ஊழியராகக் கடமையாற்றினர்'' என நேற்று நடந்த செம்மணி துப்பாக்கிச் சூட்டு நஷ்ட ஈடு வழக்கில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் முதல் நிலை புலனாய்வுக்காக எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் செம்மணி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான பரராசாவின் தந்தை பொன்னம்பலம், சட்டமா அதிபரிடமும், கான்ஸ்டபிள் ஸ்ரான்லிபிடமும், தனித்தும், ஒருமித்தும் 50,000 ரூபா நஷ்டஈடு கோரியிருந்தார்.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ. ஸி, சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை, சட்டத்தரணி கி. நாகராசா, சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி வி. யோகேஸ்வரன் ஆகியோர் ஆஜரானார்கள். முதலாம் எதிரியான சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணி பி. ஞானகரன், சட்டத்தரணி எஸ். கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

கோர்ட்டில் வழக்காளி சமுகமளித்திருந்தார். 2ம் எதிராளி சமுகமளிக்கவில்லை.

இருபகுதியினராலும் ஒப்புக்கொள்ளும் விடயம் எடுக்கப்பட்டபோது பொன்னம்பலம் பரராசாவை 2ம் எதிரி சுட்டுக் கொன்றார் என ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் அவர் தமது பணியின் விவரணத்தினுள் செயற்படவில்லையென சட்டமா அதிபர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

காலஞ்சென்ற பரராசா நல்லூர் கந்தசாமி கோவிலிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தார் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் 2ம் எதிராளி மீது கொலைக்குற்றம்சாட்டி சட்டமா அதிபர் வழக்குத்தொடர்ந்திருக்கிறபடியால், குறிப்பிட்ட செய்கையானது பிழையானதும், சட்டவிரோதமானதுமென்பதை சட்டமா அதிபர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என சட்டத்தரணி எஸ். நடேசன் வற்புறுத்தினர்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பி. ஞானகரன் தான் அதை ஏற்கவோ, மறுக்கவோ முடியாத நிலையில் இருப்பதாகக் கூறினர்.

சில தினங்களுக்கு முன்பு கொழும்பில் நடைபெற்ற பொலிஸ் துப்பாக்கிச் சூட்டு வழக்கில் 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டதை சட்டத்தரணி நடேசன், நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இவ்வழக்கில், சமாதானமாக நஷ்டஈடு வழங்கப்பட்டதாகவும், இவ்விடயத்திலும் அதே போன்று சட்டமா அதிபர் நடந்துகொண்டால் நல்லது என்றும், சட்டத்தரணி நடேசன் கூறினர்.

இதனைத் தான் மேலிடத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக அரச சட்டத்தரணி பி. ஞானகரன் கூறினர்.

பின்வரும் கேள்விகள் வழக்காளிசார்பில்எழுப்பப்பட்டது.

2ம் எதிராளி காலஞ்சென்றவரைச் சுட்டுக் கொலை செய்தது பாதகமானதும், சட்டவிரோதமுமானதா?

காலஞ்சென்றவரை இரண்டாவது எதிராளி சுட்டது அவரின் பணியின் செயற்பாட்டின் போது செய்யப்பட்டதா?

காலஞ்சென்றவரை 2ம் எதிரி சுட்டது அவரின் பணியின், விவரணத்தினுள் செய்யப்பட்டதா?

வழக்காளி காலஞ்சென்றவரின் தகப்பனரா?

காலஞ்சென்றவர் வழக்காளியையும், அவரது குடும்பத்தையும் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளவரா?

வழக்காளி எவ்வளவு நஷ்டஈடுக்கு உரித்துடையவராவர்?

சட்டமா அதிபர் சார்பில் எவ்வித கேள்விகளும் எழுப்பப்படவில்லை.

மேற்படி கேள்விகளுட்பட்ட விடயங்கள்பற்றி விசேட விசாரணை செய்ய இவ்வழக்கு 78ம் ஆண்டு மார்ச் 6ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

### பங்களாதேஷ் அதிபர்

## பாரதம் வருகிறார்

புதுடில்லி, டிச 13

பங்களாதேஷ் அதிபர் ஷியாவுர் ரஹ்மான் எதிர்வரும் திங்கட்கிழமை இருநாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு பாரதம் வருகிறார்.

பாரத ஜனாதிபதி திரு நீலன் சஞ்சீவரெட்டியின் அழைப்பை ஏற்று இங்குவரும் அவர் இரு தினங்கள் தங்கியிருப்பார்.

பாரதத் தலைவர்களுடன் அவர் இரு தரப்பிலான பேச்சு வார்த்தைகளை நடத்துவார்.

### வர்த்தக அமைச்சருக்கு வரவேற்பு

# கூட்டணி முடிவையிட்டு கனகரத்தினம் மகிழ்ச்சி!

[கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலிக்கு அமோக வரவேற்பு அளிக்க உள்ளதாக பத்திரிகைகள் மூலம் அறிந்தேன், இதுபோல் அவர்கள் ஏனைய அமைச்சர்களையும் வரவேற்று அவர்களுடனான உறவை வளர்த்து நாட்டினதும்தொகுதிகளினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

இவ்வாறு பொத்துவில் இரண்டாவது எம். பி. கனகரத்

(5-ம் பக்கம் பார்க்க)

உங்கள் உற்பத்திப் பொருட்களை
விற்கவேண்டுமா?
உங்களுக்குத் தேவையான
பாவனைப் பொருட்களை
வாங்கவேண்டுமா?
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
எஸ்.பி. சாமி அன் கொம்பனி
72, 4ம் குறுக்குத் தெரு- கொழும்பு.11
193, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
**குலமகள் ராதை**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி.ஆர்-லதா
**உழைக்கும் கரங்கள்**

**ராணி** தினசரி 10-30, 2.30, 6·00, 9.30.
[யாழ்ப்பாணம்] முத்துராமன்-விஜயா, நாகேஷ் நடித்த
**கஸ்தூரி விஜயம்**
(புதிய பிரதி)

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642.
10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி - வைஜயந்திமாலா
**தேன் நிலவு** [புதிய பிரதி]

**வெலிங்டன்** (யாழ் நகர்) தினசரி 3 காட்சிகள்
**தெய்வ மகன்**

**லிடோ** எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
**நீதிக்கு தலைவணங்கு**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி நடித்த
**தாயைக் காத்த தனயன்**
(புதிய பிரதி)

**Regal** (Jaffna)
"KRAKATOA" IS A STUNNER!
A Grand Adventure spectacle designed to knock you out.
It is Sensational. An artistic and technical triumph;
Adults may find themselves biting their nails.
Now running to packed houses in its
2nd Week 70 M. M.
"Krakatoa East of Java"
Cinerama wide screen! [Techni color]
Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
Sat, Sundays 10-30, A.M. 1-30 4-15 7-00 & 9-30P.m.

10-வது ஜனத்திரள் வாரம்!
**ராஜா** தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
யாழ்நகர் ஜெமினி, ஜெயசித்திரா நடித்த
**தசாவதாரம்**
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

**மனோஹரா** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
**உனக்காக நான்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது
★ கமலஹாசன் ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத்
★ ஸ்ரீதேவி ★ ஒய். விஜயா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
**மூன்று முடிச்சு**
திரைக்கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

லட்ச ரூபா லஞ்ச வழக்கு:

# முதலாம் எதிரியின்றி விசாரணை நடத்தலாமா?

## நாளை மறுதினம் ஆலோசிக்கப்படும்

[கொழும்பு]

லட்ச ரூபா லஞ்ச வழக்கில் 1ம் எதிரியின் சம்மதத்துடன் அவர் நீதிமன்றத்தில் சமுகமளிக்காமல், விசாரணை நடத்தலாமா? என்பது பற்றி 16ம்தேதி ஆலோசிக்கப்படும்.

இவ் வழக்கு நேற்றுகொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், 1975 மார்ச் 5ம் தேதிக்கும், 1975 மார்ச் 21ம் தேதிக்குமிடையில் உதவி செலாவணி கட்டுப்பாட்டதிகாரி கே ஜே ஸ்ரான்லி பீரிஸ், திருமதி பி டி டுள்வெல, பி வி தஜுடீன் ஆகியோர் சட்டத்தரணி ஜி டி பி விஜயசேகராவிடம் ஒரு லட்சம் ரூபா லஞ்சம் கோரியதாகவும், 2ம், 3ம் எதிரிகள் லட்ச ரூபா லஞ்சம் கோர உடந்தையாக இருந்ததாகவும், 1975 மார்ச் 21ம் தேதி, 1ம் எதிரி 25,000 ரூபா லஞ்சம் பெற்றதாகவும், 2ம் எதிரி 1ம் எதிரிக்கு உடந்தையாக இருந்ததாகவும், லஞ்ச சட்டத்தின்கீழ் மொத்தம் 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம் சிவசிதம்பரம் ஆஜரானார்; 2ம எதிரி சார்பில் சட்டத்தரணி பி. நவரத்தினராசா, சட்டத்தரணி பிபிலே, சட்டத்தரணி சிவாராஜரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம் [ஜூனியர்] சட்டத்தரணி கே பூபாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

அரசதரப்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி உபாவன்சா யப்பா, சட்டத்தரணி லூகன் ஜெயதிலகாவின் அனுசரணையுடன் ஆஜரானர்.

1ம் எதிரியான ஸ்ரான்லி பீரிஸ் நேற்று கோர்ட்டில் சமுகமளிக்கவில்லை. வைத்திய அத்தாட்சி பத்திரம் சமர்ப்பித்திருந்தார்.

'பட்ஜட்' பற்றி

### பகிரங்க சொற்பொழிவு

[நெல்லியடி]

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி [சீனசார்பு] பொதுச் செயலாளர் திரு என் சண்முகதாசன், வரவு செலவுத் திட்டம்பற்றிய பகிரங்க சொற்பொழிவுகளை நடத்த அடுத்த வாரம் வடபகுதி வருகின்றார்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்திலும், பருத்தித்துறை, உடுப்பிட்டிலும் இச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

### "இளைஞர் ஆற்றலை பயன்படுத்தவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"அளப்பரிய ஆற்றலுடைய இளைஞர் பலர் தம் ஆர்வத்தையும் ஆற்றலையும் தக்கமுறையிற் பயன்படுத்தாதிருக்கின்றனர். இதனால் அவர்கள் மட்டுமல்லாமல் அவர்களுடைய சமுதாயமும் நாடும் நஷ்டமடைகிறது. ஒரு கிராமம்முன்னேறவேண்டுமானால் அந்தக் கிராமத்தில் வாழும் இளைஞர்கள் துடிப்புடன் செயலாற்ற வேண்டும். பின் தங்கிய கிராமம் எனச்சுட்டிக்காட்டிச் சலுகைகள் பெற்றுவாழ்வதைவிட மற்றையோர் எம்மைப்பார்த்துப் பின்பற்றும்படி இக்கிராமத்தை முன்னேற்ற வேண்டும்".

இவ்வாறு உசன் இராமநாதன் கலாவித்தியாலயஆசிரியர் திரு து நடராசலிங்கம் எழுதுமட்டுவாள் இளைஞர்சங்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர். வேறு பலரும் பேசினர்.

சங்க உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு க நடராசா, உபதலைவர்: திரு செ சோமசுந்தரம், செயலாளர்: திரு து நடராசலிங்கம், உப செயலாளர்: திரு செ தம்பையா, பொருளாளர்: திரு ஏ வேதாரணியம், உறுப்பினர்கள்: திருவாளர்கள். க நடராசா, வா சிவராசா, நா சுப்பிரமணியம், வ இரத்தினஸிங்கம், கா சற்குணராசா, சு தேவராசா, சி யோகரத்தினம், த சண்முகசுந்தரமூர்த்தி, த ஸ்ரீராமச்சந்திரன், கு கிருஷ்ணர், கோ வீரகத்திப்பிள்ளை. [ஸ]

### இன்று இரசிகமணிக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

இரசிகமணி கனகசெந்திநாதன் அஞ்சலிக் கூட்டம், யாழ் வளாக இராமநாதன் மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

தமிழ் இலக்கிய மன்ற ஆதரவில், மன்றத் தலைவர் திரு திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில், யாழ் வளாகத் தலைவர் பேராசிரியர் சு வித்தியானந்தன், திரு நா சுப்பிரமணியம், திரு க நாகேஸ்வரன், குப்பிளான் சண்முகம் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். (க)

# இந்தப் பகுதிகளை இணைக்க முயற்சி

## விஸ்வமடு வி. அ. மன்றம் 18-ந் திகதி ஆலோசிக்கும்

(விஸ்வமடு)

விஸ்வமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம் குடியேற்றப்பகுதிகளை இணைத்து ஒரே கிராமசபையாக்குதல் பற்றி விஸ்வமடு விவசாயிகள் அபிவிருத்தி மன்றத்தின் பொதுக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

இக்கூட்டம் விஸ்வமடு வாசிகசாலை மண்டபத்தில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

மேற்படி பகுதிகளுக்கு ஒரு கிராமசேவையாளரின் அவசியம், விஸ்வமடு ப. நோ. கூட்டுறவுச் சங்கத்துடன் தேவிபுரம், சுதந்திரபுரம், உடையார் கட்டுக் கிளைகளை இணைத்து ஒரு விரிவான நிறுவனமாக்குதல் ஆகிய விஷயங்களும் மேற்படி கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன. [உ]

### கூட்டணி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் நேற்று முன்தினம் தேசிய அரசுப் பேரவையில் கூறினர்.

தமிழர் கூட்டணியினரின் இம்முடிவு குறித்து தாம் பெரிதும் மகிழ்ச்சி அடைவதாகவும் அமைச்சர்களுடன் முக்கியமாக நீதி அமைச்சர் திரு. டபிள்யூ தேவநாயகத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு. கனகரத்தினம் கூறினர். [ம-இ]

### மர்மச் சடலம்

[ஹொரண]

உருத் தெரியாத நிலையில் ஆறொன்றில் மிதந்த 20 வயது மதிப்பிடத்தக்க ஆணின் சடலமொன்று ஹொரணபொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. [உ]

**றியோ** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., நம்பியார்
ஜெயலலிதா-நாகேஷ் நடித்த
**அன்னமிட்டகை**
[புதிய பிரதி]

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி பி ப 4-30, 7-00
இரவு 9-30
**Flic Story**

### தமிழரசு...

[1ம பக்கத் தொடர்ச்சி]

அபிவிருத்தி செய்த பின்னர், மகாவலியைத் திசைதிருப்புவோமென்றே திரு. டட்லி கூறினரென்று திரு காமினி திசநாயக்கா தெரிவித்தார்.

### தர்மர் குறுக்கீடு

இக்கட்டத்தில் குறுக்கிட்ட திரு. வி. தர்மலிங்கம், திரு. டட்லி கூறியதாக திரு. மைத்திரிபால தெரிவித்தது உண்மையே என்று கூறினர். [ம-இ]

### உரியவர் யார்?

சுன்னாகத்திற்கும், பரந்தனுக்கும் இடையில் பாவிக்க எடுக்கப்பட்டுள்ள ரயில் சீஸன் ரிக்கட் ஒன்று, யாழ்ப்பாணம் நவீன சந்தையில்வைத்து சி. சேந்திரகுமார் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

**மணிவாக்கு**

எல்லோரிடத்திலும்நேசமாயிரு; சிலரிடத்தில் மாத்திரம் நம்பிக்கை வை; ஒருவருக்கும் தீங்குசெய்யாதே.

—ஷேக்ஸ்பியர்

ஈழநாடு
The Eelanaadu

## நாட்டின் அபிவிருத்தி

"சுதந்திரமும் நீதியும் நிலவும் ஒரு சமுதாயத்தை உருவாக்க இந்த அரசு தவறுமானால் அதனைப் பதவியிலிருந்து வெளியேற்றும் உரிமை மக்களுக்கிருக்கிறது. எமது பதவிக்காலத்தில் அப்படியான ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியாமல் போகுமானால் மக்களின் தீர்ப்பை நாம் ஏற்றுக்கொண்டு அதிகாரத்தை வேறு எந்தக் கட்சியிடமும் கையளித்துவிட்டு விலகிக்கொள்ள ஆயத்தமாக இருக்கின்றோம்"

கொழும்பில் முஸ்லிம் மகளிர் பொதுக்கூட்டமொன்றில் பேசியபோது பிரதமமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

மக்களுக்கு கொடுக்கப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் எந்த ஒரு அரசும் மக்களின் தீர்ப்புக்குள்ளாக நேரும் என்பதில் சந்தேகமில்லை.

மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அரசியல் கட்சிகளுக்கு இருக்கவேண்டியது அவசியம். அது இல்லாதபட்சத்திலேயே கலவரங்களும், குழப்பங்களும் ஏற்படவும் சிலசமயங்களில் சர்வாதிகாரம் தலைதூக்கவும் சந்தர்ப்பம் உண்டாகிவிடுகின்றது. பலகட்சி அரசியல் நிலவும் பல்வேறு நாடுகளிலும் நாம் இம்மாதிரி நிகழ்ச்சிகளைக் கடந்த காலங்களில் காணமுடிந்தது.

ஏன், நம் நாட்டில் அண்மையில் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் ஏற்பட்ட கலவரங்கள், வன்முறைகளுக்கும் கூட இந்தப் பக்குவமின்மையே காரணம் என்று கூட சொல்லிவிடலாம்.

திரு. ஜயவர்த்தனவின் அரசாங்கம் நாட்டின் நலனுக்கான பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த முனைந்து வருவதை மக்கள் உணர்வார்கள். அவை முழுமையாகப் பயனளிக்க சில காலம் எடுக்கக்கூடும். ஆனால் அவை முறையாக செயல்படுவதுடன் அரசாங்கத்தின் கவனம் வேறு திசைகளில் திருப்பப்பட்டு செயல்திட்டங்கள் பாதிக்கப்படாமலிருக்கவும் வேண்டும்.

எனவேதான் நாட்டின் அபிவிருத்திக்குப்பின் பலவகையிலும் குந்தகம் விளைவித்துவரும் சிறுபான்மை மக்களின் மொழியுரிமை போன்ற முக்கியமான பிரச்னைகளை கூடியவிரைவில் தீர்த்துவைக்கவேண்டும் என்று வலியுறுத்தவேண்டியிருக்கின்றது.

நாட்டில் ஐக்கியமும், அமைதியும், ஒருமைப்பாடும் நிலவுமானால் அபிவிருத்தித்திட்டங்கள் பாதிப்புறும் நிலை ஏற்படமாட்டாதல்லவா?

# நியாயமெனக் கண்டால் நீதியானதைச் செய்வேன்

## வடமாநிலக் கல்வி அதிபதி உரை

[இமையாணன்]

"நியாயம் எனப்படுவதற்குப் பயமில்லாமல் நீதி செலுத்த வேண்டும்" என்று கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற வைபவத்தில், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தா. மாணிக்கவாசகர் கூறினார்.

இக்கல்லூரியில், பயிற்சி முடித்து வெளியேறும் இரண்டாம் வருட மாணவர்களுக்கென முதலாம் வருட மாணவர்கள் அளித்த மதிய போசன விருந்தின்போது திரு. மாணிக்கவாசகர் மேலும் கூறியதாவது;

தற்போது நடைமுறையில் இருக்கும் காரியாலயச் செயற்படி சகல பாடசாலைகளுக்கும் சுற்றுநிருபங்கள் ஆங்கிலத்தில் அனுப்பப்படுகின்றன. இதனால் தமிழ் மட்டும் தெரிந்த அதிபர்களும், சிங்களம் மட்டும் தெரிந்த அதிபர்களும் கஷ்டமடைகின்றனர். இனிமேல் தமிழ்ப் பாடசாலைகளுக்கு தமிழிலும், சிங்களப் பாடசாலைகளுக்குச் சிங்களத்திலும் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளேன்.

"கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்னவின் தலைமையில் கல்வி இலாகாவில் நீதி, நியாயம், நல்ல மனப்பாங்கு முதலியன கிடைக்குமென்ற நம்பிக்கை உண்டு.

"நியாயமான காரியத்திற்கு மனித ரீதியில் என்னால் இயலக்கூடியதைச் செய்வேன். உதாரணமாக 1970ல் சமரநாயக்கா என்ற ஆசிரியர் ஒருவர் இடாப்பில் பிழைவிட்டாரென்ற காரணத்திற்காக வேலைநீக்கஞ்செய்யப்பட்டார். ஆனால் அவர் மீது புகார்களோ, முறைப்பாடுகளோ கல்வி இலாகாவின் கந்தோரில் இருக்கவில்லை. எனவே அவருக்கு மீண்டும் வேலையை வழங்கினேன்.

"உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள ஒரு நாலாந்தர அதிபர் வவனியாவுக்கு மாற்றப்பட்டார். ஆனால் அவருடைய சிறந்த சேவை தமக்கு அவசியமென்று அவ்வூர் மக்கள் கேட்டுக்கொண்டனர். அக்கோரிக்கை நியாயமாகப்பட்டமையால் அவரை மீண்டும் மாற்றிக்கொடுத்தேன்."

"முதலாம் வருட மாணவ ஆசிரியர் திரு. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கலாசாலை அதிபரான திரு. ஜே. ஜெயராசா, புலவர் சோ. கனகரத்தினம், மற்றும் ஆசிரிய மாணவர் தங்கராசா, கேசவன் உட்படப் பலர் உரை நிகழ்த்தினார்கள். [க]

## சீவல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உபபொருள் உற்பத்தித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இதன்படி பனஞ்சாராயம், போத்தல்களில் அடைத்தல், விஞகிரி, சஸ்ட் முதலியவை தயாரிக்க ஊக்கமளிக்கப்படும்.

கலால் சட்டம் மாற்றி அமைக்கப்படும். பனம்வெல்லத்துக்கு உத்தரவாதவிலை நிர்ணயிக்கப்படும். ஊழியர் சேமலாபநிதி வசதிகள் சீவல் தொழிலாளருக்கும் உடனடியாக அமுல்படுத்தப்படும்.

சீவல் தொழிலாளருக்கு விபத்து காப்புறுதி வசதியும் செய்துகொடுக்கப்படும்.

ரப்பர், தேயிலை ஆராய்ச்சி நிலையங்கள் போன்று வடக்கில் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையமொன்றும் அமைக்கப்படும். (ம)

# உலகத் தமிழ் மாணவப் பேரவை லண்டன் கூட்டத்தில் முடிவு

லண்டன், டிச,13

பிரித்தானிய பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள் அனைத்தும் பங்கு கொண்ட கருத்தரங்கு ஒன்று 'சஷ்த பாங்' கல்லூரியின் எட்டிறிச் மண்டபத்தில் கடந்த நவம்பர் 30ம் திகதி நடைபெற்றது. இக்கருத்தரங்கின் முக்கிய அம்சமாக பிரித்தானியாவில்கல்விபயிலும் எல்லாத் தமிழ் மாணவர்களும் ஒன்றுகூடி தமக்கென ஒரு பேரவை அமைக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

ஆரம்ப உரை நிகழ்த்திய செல்வன் சு. அருளானந்தன் இன்றைய நிலையில் உலகத் தமிழ் மாணவன் கடமை என்ன என்பதனைப்பற்றிஉரையாற்றினர் அவர் விலிஸ்டன் கல்லூரியின் சார்பில் நிகழ்த்திய உரையில் 'மாணவர்களாகிய நாம் எமது கடந்தகால வேறுபட்ட அரசியல் கட்சிகளினால் எமக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் போன்று எதிர்காலத்திலும் எமது இனத்திற்கு ஒரு நிலை ஏற்படக் கூடாது. எனவே மாணவர்களாகிய நாம்'தமிழ் மாணவப் பேரவை' என்ற அமைப்பின்கீழ் ஒன்றுபட்டு இயங்கி தமிழின சுபீட்சத்திற்கு வழியமைக்கவேண்டுமென வலியுறுத்தினர்.

நேர்த ஈஸ்ற் கல்லூரியின் சார்பில் உரையாற்றிய தி. நித்தியானந்தன், இனவெறி அடிப்படையில், எமது அரசியல் நிலைமைகளினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் குறிப்பிட்டு, தமிழ் இனத்தின் எதிர்கால வாழ்விற்கு மாணவர்களின் ஐக்கியம், அவர்களது கடமைகள் என்பனபோன்றவற்றை ஆராய்ந்து விளக்கம் அளித்தார்.

தொடர்ந்து பல கல்லூரி மாணவர்களின் சிறப்புச்சொற்பொழிவுகளோடும் எல்லா மாணவர்களுடைய ஏகோபித்த ஆதரவோடும் 'தமிழ் மாணவப்பேரவை' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பின் அங்கத்தவர்கள், நிர்வாகக்குழு சகலபாடசாலை மாணவர்களையும் உள்ளடக்கியதொன்றாக அமைக்கப்பட்டது.

இதன் முக்கிய அம்சங்களாக இலங்கைவாழ் தமிழ் மாணவர்களுக்கு சர்வதேசத் தொடர்புகளை ஏற்படுத்துதல், தமிழின விடுதலைப் போராட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு நல்குதல். சர்வதேச அடிப்படையில் தமிழ் மாணவப் பேரவை அமைப்பினை உருவாக்குதல் தமிழினம் ஒரு சுதந்திரமும் தனித்துவமும்மிக்க இனமாக வாழ வழியமைத்தல் போன்றவை முக்கிய குறிக்கோளாகக் கொள்ளப்படும்.

இதன் நிர்வாக உறுப்பினர்கள் ஒவ்வொரு வருடமும் பொதுக்கூட்டம் ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

# பொன்ட்கலன் றிட்மனுமீது நாளை விசாரணை

[யாழ்ப்பாணம்]

சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளைக்கு எதிராக திரு. பொன்ட்கலனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் றிட் மனு மீதான விசாரணை நாளை 15ந் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

1975ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ந் திகதி நடந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாகச் சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணத்தில் தாக்கல்செய்யப்பட்ட மேற்படி வழக்கு விசாரணை கொழும்புக்கு மாற்றப்பட்டதையடுத்து திரு பொன்ட்கலன் மேற்படி றிட் மனுவைத் தாக்கல்செய்தார்.

இந்த வழக்கை யாழ்ப்பாணத்திலேயே விசாரிக்கவேண்டுமென்று அவர் தமது மனுவில் கோரியிருந்தார்.

திரு பொன்ட்கலன் சார்பில் சிரேஷ்ட வழக்கறிஞர் புள்ளைநாயகம், டாக்டர் நீலன் திருச்செல்வம், திரு எஸ்.ஜே.வி சந்திரகாசன், திருமதி சாந்தினி ஞானகரன், திரு. எம். சுமந்திரன் ஆகியோர் ஆஜராவார்களென்று தெரிகிறது. சட்டமா அதிபருக்கு எதிராக இம்மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 17-ந் திகதி

# யாழ். லயன்ஸ் கழக சித்திரக் காட்சி

வெறுங் கோடுகள் மாத்திரமே மனித மனத்திலே எத்தனை அதிசயிக்கத்தக்க உணர்வுகளை எழுப்புவதாயுள்ளன. மனிதநல்வாழ்வின் அத்தியாவசிய தேவையான கல்வியே கோடுகளின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது எனலாம். ஆம், எழுத்துக்களும் கோடுகளும் கோடுகளினால் தான் ஆனவை. கல்வியினால் பெற்ற அறிவுமட்டும்வாழ்வை வளமாக்கும் என்பது தவறு. வாழ்வின் வளத்திற்கு உள்ளச் செழுமையும் அவசியம். உள்ளச்செழுமைக்குக் கவின் கலைகள் உறுதுணைபுரிகின்றன. ஓவியமும் சித்திரமும் கவின் கலைகளின், அங்கங்களாகும். உள்ளச்செழுமை மூலம் நல்வாழ்வுக்குக் கவின்கலைகளும் உறுதுணையாவதால் கவின் கலைகளும் கல்வியின் ஓர் அங்கம் எனலாம்.

ஓவியமும் சித்திரமும்கோடுகளினால்தான் ஆக்கப்படுபவை. இந்தக்கோடுகள் செய்யும் விந்தைகள் அனந்தம். வெறும் கோடுகளைக் கொண்டு ஆக்கப்பெற்று ஓவியமும் சித்திரமும் வரண்டுபோயிருந்த உள்ளத்திலே எத்தனை பசுமையை ஏற்படுத்துகின்றது. வயிற்றைப் பசி கிள்ளுகின்ற நேரம் சிறந்த ஓவியங்களைப்பார்த்துப் பசியைச் சிலநிமிட நேரமாவது மறக்கலாம் என்பதும் அழகினால் மனிதனுக்கு யாது பயனுமில்லை என்று அறிஞர் இங்கர்சால் சொன்னது தவறு என்பதும் யாழ் லயன்ஸ் கழகம் நடத்தும் நத்தார் - புதுவருட சித்திரப்போட்டியில் பங்குபற்றும் சித்திரங்களைப் பார்த்த போது எனக்குப் புலனாயிற்று. இப்போட்டிக்கு மாணவர்களால் அனுப்பப்பட்ட சித்திரங்கள் கலைநிலையப்பதிப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன். வண்ணவண்ணச் சித்திரங்கள் என் மனதைப்பெரிதும் மயங்க வைத்துவிட்டன! நமது மாணவர்களின் கற்பனைத்திறதான் என்னே! இச் சித்திரங்களைப் பார்க்கவிரும்புபவர்கள் இம் மாதம் 17-ம் திகதி பிற்பகல் 7மணிக்கு நல்லூரிலுள்ளயாழ் இன்னில் கண்டுகளிக்கலாம். இச்சித்திரங்கள் அன்றுதினம் அங்கு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுவதுடன்பரிசுக்கான சித்திரங்களும அன்று தெரிவு செய்யப்படவுள்ளன. சித்திரங்களுக்கு அன்றே பரிசுகளும வழங்கப்படும. இலங்கையிலுள்ள அமெரிக்கதகவல்நிலையம, இந்தியத் தகவல் நிலையம பிரிட்டிஷ் கவுன்ஸில் முதலியன பரிசுப் பொருட்களை வழங்கவுள்ளன எமது சிறார்களின் சைவண்ணத்தைக் காண ஒருதடவை அதாவது எதிர்வரும 17ம திகதி சனிக்கிழமை பிற்பகல் நல்லூர் யாழ். இன் ஸைக்ஸ்போய்ப் பாருங்களேன்.

—சபா

# யாழ் மட்டுநகரில் வைத்திய பீடம்

## கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத்தில் விரைவில் வைத்திய பீடம் அமைக்கப்பட உள்ளது.

இத் தகவலை கல்விஅமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன தெரிவித்தார்.

பல்கலைக்கழக 'செனட்'டில் நடைபெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்திலேயே கல்விஅமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலும் மாத்தறையிலும் விரைவில் நிறுவப்பட இருக்கும் இருவளாகங்களிலும் வைத்தியபீடம் அமைக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பி. பி. ஜி எல். சிறிவர்த்தன, கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிக்காரியதரிசி கொழும்பு மருத்துவ பீடத் தலைவர் உட்பட பல பேராசிரியர்களும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (இ)

## முயல், ஆமை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ருக்கு விஜயஞ்செய்தால் இந்த உண்மை அவருக்கு விளங்கும். அமைச்சர் அங்கு வருவதானால் பகலில்தான் வரவேண்டும். இரவில் அவ்வீதிகளில் செல்லமுடியாது. அதுவும் காரில் செல்லமுடியாது. ஜீப்பில்தான் செல்லமுடியும்." [ம-இ]

இப்பத்திரிகை 'ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka.